## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## முதல் பத்து

## ஏழாம் திருமொழி - அங்கண் ஞாலம்
## சிங்கவேள் குன்றம்

** அங்கண் ஞாலம் அஞ்ச * அங்கோர் ஆளரியாய் * அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதன் இடம் **
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு * பத்திமையால் * அடிக் கீழ்ச்
செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள் குன்றமே 1

அலைத்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சு இடந்த * கூர் உகிராளன் இடம் **
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல் * வன்துடிவாய் கடுப்ப *
சிலைக் கை வேடர் தெழிப்பறாத * சிங்கவேள் குன்றமே 2

ஏய்ந்த பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதிடம் **
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும் * அன்றியும் நின்றழலால் *
தேய்ந்த வேயும் அல்லதில்லாச் * சிங்கவேள் குன்றமே 3

எவ்வம் வெவ்வேல் பொன் பெயரோன் * ஏதலன் இன்னுயிரை
வவ்வி * ஆகம் வள்ளுகிரால் * வகிர்ந்த அம்மானதிடம் **
கவ்வு நாயும் கழுகும் * உச்சிப் போதொடு கால் சுழன்று *
தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள் குன்றமே 4

மென்ற பேழ் வாய் * வாள் எயிற்றோர் கோள் அரியாய் * அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால் * போழ்ந்த புனிதன் இடம் **
நின்ற செந்தீ மொண்டு சூறை * நீள் விசும்பு ஊடிரிய *
சென்று காண்டற்கு அரிய கோயில் * சிங்கவேள் குன்றமே 5

எரிந்த பைங்கண் இலங்கு பேழ் வாய் * எயிற்றொடு இது எவ்வுரு என்று *
இரிந்து வானோர் கலங்கி ஓட * இருந்த அம்மானதிடம் **
நெரிந்த வேயின் முழையுள் நின்று * நீள் நெறிவாய் உழுவை *
திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும் * சிங்கவேள் குன்றமே 6

முனைத்த சீற்றம் விண் சுடப் போய் * மூவுலகும் பிறவும் *
அனைத்தும் அஞ்ச ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
கனைத்த தீயும் கல்லும் அல்லா * வில்லுடை வேடருமாய் *
தினைத்தனையும் செல்ல ஒண்ணாச் * சிங்கவேள் குன்றமே 7

நாத் தழும்ப நான்முகனும் * ஈசனுமாய் முறையால்
ஏத்த * அங்கோர் ஆளரியாய் * இருந்த அம்மானதிடம் **
காய்த்த வாகை நெற்றொலிப்பக் * கல் அதர் வேய்ங்கழை போய் *
தேய்த்த தீயால் விண் சிவக்கும் * சிங்கவேள் குன்றமே 8

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் * நம்முடை நம்பெருமான் *
அல்லி மாதர் புல்க நின்ற * ஆயிரம் தோளன் இடம் **
நெல்லி மல்கிக் கல் உடைப்பப் * புல் இலை ஆர்த்து * அதர்வாய்ச்
சில்லு சில் என்று ஒல்லறாத * சிங்கவேள் குன்றமே 9

** செங்கண் ஆளி இட்டிறைஞ்சும் * சிங்கவேள் குன்றுடைய *
எங்கள் ஈசன் எம்பிரானை * இருந்தமிழ் நூற்புலவன் **
மங்கையாளன் மன்னு தொல் சீர் * வண்டறை தார்க் கலியன் *
செங்கையாளன் செஞ்சொல் மாலை * வல்லவர் தீதிலரே 10

**அடிவரவு:** அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வம் மென்ற எரிந்த முனைத்த நா நல்லை செங்கண் கொங்கு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---